## காலாண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் --- 1 ( 2019 )

### மேல்நிலை முதலாம் ஆண்டு

### வணிகவியல்

நேரம் : 2.30 மணி  மதிப்பெண் : 90

பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.  20 × 1 = 20

1. வியாபாரம் மற்றும் வணிகம் - --- ---- பேரரசில் பொதுவானவையாக இருந்தது.
   அ) பல்லவர்  ஆ) சோழர்  இ) பாண்டியர்  ஈ) சேரர்

2. பின்வருவனவற்றில் எந்த தொழிலமைப்பு அரசால் உருவாக்கப்பட்டது அல்ல?
   அ) தனியார் நிறுவனங்கள்  ஆ) பொது நிறுவனங்கள்
   இ) இணை நிறுவனங்கள்  ஈ) மேற்கண்ட அனைத்தும்

3. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது --------
   அ) உற்பத்தித் தொழில  ஆ) வணிகம்
   இ வியாபாரம்  ஈ) இவைஅனைத்தும்

4. தவறான கூற்று எது?
   தனியாள் வணிகம் -------
   அ) குறைந்த முதல் தேவைப்படும் தொழில்.
   ஆ) விரைவான முடிவு எடுக்கப்படும் தொழில்.
   இ) இந்தியாவில் மட்டுமே காணப்படும் தொழில்.
   ஈ) பலர் கடன் தர முன்வருவர்.

5. கூட்டாண்மை பதிவு ----------
   அ) கட்டாயம்  ஆ) விருப்பத்தின பேரில்
   இ) அவசியமில்லை  ஈ) இவற்றில் எதுவுமில்லை

6. நிறுவனத்திற்கும் வெளிநபருக்கும் உள்ள உறவு முறையைப் பற்றி குறிப்பிடுவது எது?
   அ) தகவலறிக்கை  ஆ) சங்க நடைமுறை விதிகள்
   இ) அமைப்பு முறையேடு  ஈ) கூட்டுருவாக்கச் சான்றிதழ்

7. கூற்று (A) : பங்குதாரரின் இடர் என்பது பங்குகளின் முகமதிப்பில் செலுத்தப்படாத தொகை மட்டுமே பொறுப்பாகும்
   காரணம் (R) : பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்
   அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
   ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
   இ) A சரி ஆனால் R தவறு
   ஈ) A தவறு ஆனால் R சரி

8. கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர்கள் --------------
   அ) யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆக முடியாது  ஆ) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்
   இ) யார் வேண்டுமானாலும் இருக்கலாம்  ஈ) மேற்கண்டவற்றில் ஏதும் இல்லை

9. பன்னாட்டு நிறுவனங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன?
   அ) கிளைகள்  ஆ) அதன் துணை நிறுவனங்கள்
   இ) தலைமையகம்  ஈ) நாடாளுமன்றம்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

10. அரசு நிறுவனத்தின் பங்கு முதலீடு -------- க்கு குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
    அ) 75 %  ஆ) 60%  இ) 95%  ஈ) 51%

11. பொருத்துக
    1) தபால் தந்தி -- a. பொதுக்கழகம்
    2) இந்திய ரிசர்வ் வங்கி --- b. அரசுநிறுமம்
    3) இந்தியன் ஏர்லைன்ஸ் --- c. துறைவாரி அமைப்பு
    4) தமிழ்நாடு போக்குவரத்து கழகம் --- d. சட்டமுறை நிறுமம்
    அ) c d a b  ஆ) d a b c  இ) c d b a  ஈ) c a d b

12. ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது?
    அ) மைய வங்கி  ஆ) வணிக வங்கி
    இ) கூட்டுறவு வங்கிகள்  ஈ) வெளிநாட்டு வங்கிகள்

13. தவறான இணை எது?
    அ) ஸ்டேட்பாங் ஆப் இந்தியா ---- வணிக வங்கி
    ஆ) டியுட்செ பாங்க் ---- வளர்ச்சி வங்கி
    இ) பாங்க் ஆ:ப் அமெரிக்கா --- வெளிநாட்டு வங்கி
    ஈ) தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி ---- கூட்டுறவு வங்கி

14. RTGS மூலம் குறைந்த பட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
    அ) 5 லட்சம்  ஆ) 50,000
    இ) 2 லட்சம்  ஈ) எவ்வளவு தொகையை வேண்டுமானாலும்.

15. பண்டக காப்பகம் ----------- தடைகளை நீக்குகிறது.
    அ) ஆள் சார்  ஆ) காலத் தடை
    இ) இடர்பாட்டு தடை  ஈ) அறிவு தடை

16. நிலப் போக்குவரத்தினை ----------- என்றும் அழைக்கப்படுகிறது.
    அ) நடைப்பாதைகள் போக்குவரத்து  ஆ) சாலைப் போக்குவரத்து
    இ) மேற்பரப்பு போக்குவரத்து  ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

17. காப்பீட்டின் அடிப்படை கோட்பாடு_ _______ ஆகும்.
    அ) மிக்க நம்பிக்கை  ஆ) கூட்டுறவு
    இ) பகர உரிமை  ஈ) அண்மை காரணம்

18. புற ஒப்படைப்பின்முக்கிய நன்மை -------------
    அ) உற்பத்தித் திறன்  ஆ) செலவு குறைப்பு
    இ) திறன்  ஈ) அலகுகள்

19. இந்தியாவின் மிகப்பெரிய வணிக வங்கி ---------
    அ) ஐ சி ஐ சி ஐ  ஆ) எஸ் பி ஐ
    இ) பி என் பி  ஈ) ஆர் பி ஐ

20. அரசுத் தொழில்களின் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது ----------
    அ) அரசு நிறுவனங்கள்  ஆ) தனியாள் வணிகம்
    இ) துறைவாரி நிறுவனங்கள்  ஈ) பொதுக் கழகம்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி — II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 2 = 14

21. வணிகம் பொருள் தருக.
22. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?
23. இந்துச் சட்டத்தின் இரணடு பிரிவுகள் யாவை?
24. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
25. அயல் நாட்டு நிறுமம் என்றால் என்ன?
26. தகவலறிக்கை என்றால் என்ன?
27. கூட்டுறவு - வரையறு.
28. அரசு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுக.
29. மத்திய வங்கி பற்றி சுருக்கமாக விளக்குக.
30. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடத்தினை எவ்வாறு அழைக்கப்பட்டது? அதன் வகைகள் யாது?

## பகுதி — III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 3 = 21

31. அமைப்பு முறையேடு என்றால் என்ன?
32. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
33. வணிக வங்கி தொடர்பாளர் பற்றி சுருக்கமாக விளக்குக.
34. இந்துக் கூட்டுக் குடும்பத் தொழின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றினை விவரி
35. கூட்டாண்மை இலக்கணம் வரைக.
36. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
37. பற்று அட்டையின் தேவையைக் குறுகிய அளவில் விளக்குக.
38. பண்டக் காப்பகத்தின் மூன்று பணிகள் குறிப்பிடுக.
39. சார்ட்டர் நபர் என்றால் என்ன?
40. " பசுத்தோல் போர்த்திய புலி" என்ற பழமொழியை நமக்கு ஞாபகப் படுத்தும் நிறுவனம் எது? அந்நிறுவனத்தைப் பற்றி நைல். H. ஜேகோபியின் கருத்து யாது?

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி — IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. பண்டமாற்று வணிகத்தின் தடைகள் யாவை? ( ஏதேனும் ஐந்து )

( அல்லது )

பின்வரும் வங்கிகளைப் பற்றி சிறு விளக்கம் தந்து, உதாரணம் தருக.

அ) வணிக வங்கிகள் ஆ) வெளிநாட்டு வங்கிகள் இ) கூட்டுறவு வங்கிகள்
ஈ) வளர்ச்சி வங்கிகள் உ) சிறப்பு வங்கிகள்

42. பொருளாதாரச் செயல்பாடுகளுக்கும் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி

( அல்லது )

காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி.

43 ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்களை தெளிவுபடுத்துக

( அல்லது )

கூட்டுறவின் கொள்கைகள் என்ன?

44. செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? ( ஏதேனும் 10 )

( அல்லது)

எந்த சூழ்நிலையில், நீதிமன்றத்தால் கூட்டாண்மை கலைக்கப்படுகின்றது?

45. உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் – ஓர் ஒப்பீடு செய்க ( ஏதேனும் 5 )

( அல்லது)

சிறு குறிப்பு வரைக :

அ) ஆராய்ச்சித் தொழிற்சாலை ஆ) மரபுசார் தொழிற்சாலை
இ) கட்டுமானத் தொழிற்சாலை

46. தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை? ( ஏதேனும் 5 )

( அல்லது)

பொதுத்துறை நிறுவனங்களின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து )

47. வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.

( அல்லது)

தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613